தலைமைப் பொறியாளர் (நெ) அலுவலகம்
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,
சென்னை– 600 025.

குறிப்பாணை எண்.5668 / நிர்.1/ க(ம)ப / 2026/ நாள். 10/06/2026

பொருள்: பணியமைப்பு – நெடுஞ்சாலைத்துறை – க(ம)ப அலகு – மாநில அரசில் பணிபுரியும் அரசுப்பணியாளர்களுக்கு அவர்கள் பெற்றிடும் கூடுதல் கல்வித் தகுதிக்கான ஊக்கத்தொகை வழங்குவது குறித்து வழிகாட்டு முறைகள் – ஆணைகள் வெளியிடப்பட்டது தொடர்பான சில அறிவுறுத்தல்கள் வெளியிடுதல் – கூடுதல் விவரங்கள் கோருவது – தொடர்பாக.

பார்வை: முதன்மை இயக்குநர் (நெ) சென்னை அவர்களின் க.எண்.2271/கமுக்கம்.1 /2024/நாள்.22.05.2026.

✡✡✡✡✡

பார்வையில் காணும் முதன்மை இயக்குநர் (நெ) அவர்களின் கடித நகல் இத்துடன் இணைத்து அனைத்து கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் கோட்டப் பொறியாளர்கள் (நெ) க(ம)ப–களுக்கு அனுப்பப்படுகிறது.

மேற்படி, முதன்மை இயக்குநர் (நெ) அவர்களின் கடிதத்தில் கோரப்பட்டுள்ள விவரங்களை ஒருங்கிணைந்த அறிக்கையாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு அனைத்து கண்காணிப்புப் பொறியாளர்கள் (நெ) க(ம)ப கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: மேற்படி

கு.கோ.சத்தியபிரகாஷ்
தலைமைப் பொறியாளர் (நெ)
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு

பெறுநர்:-
அனைத்து கண்காணிப்புப் பொறியாளர்கள் (நெ) க(ம)ப.

நகல்:-
1. அனைத்து கோட்டப் பொறியாளர்கள் (நெ) க(ம)ப.
2. அலுவலக பிரிவு, தலைமைப் பொறியாளர் (நெ) க(ம)ப அலுவலகம்.

//உண்மை நகல் / உத்தரவுப்படி / அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்

10/06/2026

கமுக்கம் —005668—

நெடுஞ்சாலைத்துறை

**அனுப்புநர்**
முதன்மை இயக்குநர்
நெடுஞ்சாலைத்துறை
கிண்டி, சென்னை – 600 025.

**பெறுநர்**
1. தலைமைப்பொறியாளர்(நெ),
கட்டுமானம் (ம)பராமரிப்பு,
சென்னை–25.

2. இயக்குநர்,
நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்,
சென்னை–25.

3. திட்ட இயக்குநர்,
சென்னை கன்னியாகுமரி,
தொழிற்தடத்திட்டம்,
சென்னை–25.

4. மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்(TNRDC)
சென்னை

26 MAY 2026

**கடித எண்.2271/கமு1/2024 நாள். 22.05.2026**

26/5/26

ஐயா/அம்மையீர்,

**பொருள்** பணியமைப்பு – ஊக்கத் தொகை – மாநில அரசில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களுக்கு அவர்கள் பெற்றிடும் கூடுதல் கல்வித் தகுதிக்கான ஊக்கத் தொகை வழங்குவது குறித்து வழிகாட்டு முறைகள் – ஆணைகள் வெளியிடப்பட்டது தொடர்பான சில அறிவுறுத்தங்கள் வெளியிடுதல் – கூடுதல் விவரங்கள் கோருவது தொடர்பாக.

**பார்வை**
1. அரசு கடித எண்.8253982/எச்.கே.1/2024–1, நாள்.23.08.2024. (இணைப்பு அரசு செயலாளர், மனிதவள மேலாண்மை துறை நேர்முக கடித எண் 7449188 / அவி–II /2024–4 நாள்:25.07.2024)
2. முதன்மை இயக்குநர்(நெ) சென்னை அவர்களின் கடித எண்.2271/கமு1/2024, நாள். 30.08.2024, 18.09.2024, 18.10.2024, 26.11.2024, 23.12.2024 (ம) 15.10.2025.
3. அரசு கடித எண்.8253982/எச்.கே.1/2024 – 7,8 (ம), நாள். 05.01.2026, 12.02.2026 (ம) 24.03.2026.

------

பார்வை 3–இல், காணும் அரசு கடிதங்களின் மீது அன்பான கவனத்தை கொண்டுவர விழைகிறேன்.

அக்கடிதங்களில் நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு கூடுதல் கல்வித் தகுதிக்கான ஊக்கத் தொகை வழங்குவது தொடர்பாக, தனியாக ஆணை வெளியிட ஏதுவாக கீழ்க்கண்ட விவரங்களை அரசுக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

1) நெடுஞ்சாலைத்துறையின் எந்தெந்த பதவிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கலாம் என்பது குறித்த பரிந்துரை.

2) தற்போதுள்ள பணிவிதிகளின்படி தேவையான கல்வித் தகுதிகள் என்னென்ன?

3) அப்பதவியின் கடமைகளும் பொறுப்புகளும் என்னென்ன?

4) அப்பதவியின் பணிகள் தொடர்பாக கூடுதல் கல்வித் தகுதி எவையெவை?

5) அக்கூடுதல் கல்வித் தகுதி எந்தெந்த வகையில் துறையின் வளர்ச்சிக்கும், அரசிற்கும் பங்களிப்புள்ளதாக அமையும்.

மேற்கண்ட அனைத்து விவரங்களும் உள்ளடங்கிய கருத்துருவினை தங்களின் குறிப்புரையுடனும், அரசுக்கு அனுப்ப ஏதுவாக உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முதன்மை இயக்குநருக்காக,
நெடுஞ்சாலைத்துறை

22/05/26